பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
27.08.2025 WEDNESDAY 7 15 AM
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு கஷ்மீரில் கனமழை மற்றும் நிலச்சரிவால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்க தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த, கடந்த 11 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 75 ஆயிரத்திற்கும் அதிகமான புத்தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

3. சுங்கச்சாவடி பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் கல்வித் தகுதியை மேம்படுத்த Project Aarohan என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

4. காற்றாலை மின்சாதன உற்பத்தியில் இந்தியா உலகின் 3-வது மிகப் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

5. இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

<<<<>>>>

ஜம்மு கஷ்மீரில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

வைஷ்ணவி கோவிலுக்குச் செல்லும் பாதையில் ஏற்பட்ட நிலச்சரிவில் மட்டும் 6 பேர் உயிரிழந்ததுடன், 18 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இந்தப் பாதை மூடப்பட்டுள்ளது.

ஜம்மு பகுதியில் ஏற்பட்டுள்ள நிலச்சரிவு காரணமாக, ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலை காரணமாக விமான சேவைகளும், இணையதளம் மற்றும் செல்ஃபோன் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. ஜம்மு பிராந்தியத்தில் கல்வி நிறுவனங்களுக்கு இன்றும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மழை நிலவரம் குறித்து, துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உறுதி அளித்துள்ளார்.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக, நாட்டில் ஒரு லட்சத்து 75 ஆயிரத்திற்கும் அதிகமான புத்தொழில்கள் தொடங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இத்தகைய புத்தொழில்கள் இளைஞர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், வேலை வழங்குபவர்களாகவும், அவர்களை உருவாக்கி வருவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அரசு நிர்வாகம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்படுவதில், தகவல் அறியும் உரிமைச் சட்டமும், தகவல் ஆணையங்களும் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தகவல் ஆணையங்களின் தேசிய கூட்டமைப்பின் 15வது ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பணியாளர் நலத்துறை மேற்கொண்ட சீர்திருத்தங்கள் காரணமாக, ஆயிரத்து 600க்கும் அதிகமான தேவையற்ற விதிமுறைகள் நீக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மேலும், கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களில் அரசு அதிகாரிகளின் சான்றொப்பம் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசு துறைகளின் பணிநியமனங்கள், வெளிப்படைத் தன்மையுடன், தகுதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய, குறிப்பிட்ட சில பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான மின்னணு இதழையும் திரு. ஜிதேந்திர சிங் வெளியிட்டார்.

<<<<>>>>

*சுங்கச்சாவடி பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் கல்வித் தகுதியை மேம்படுத்த Project Aarohan என்ற புதிய திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தொடங்கியுள்ளது.*

*இதன் தொடக்க விழாவில் பேசிய அந்த ஆணையத்தின் தலைவர் திரு. சந்தோஷ்குமார் யாதவ், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைக்கவும், அவர்களது நிதிச்சுமையை போக்கவும், புதிய திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றார்.*

*11ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இத்திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் தலா 12 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.*

*கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்கள், பட்ட மேற்படிப்பை தொடரும் போது அவர்களுக்கு, 50 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும் திரு. சந்தோஷ்குமார் யாதவ் தெரிவித்தார்.*

*<<<<>>>>*

*காற்றாலை மின்சாதன உற்பத்தியில் இந்தியா உலகின் 3-வது மிகப் பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.*

*சர்வதேச காற்றாலை மின் உற்பத்தி கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, உலகின் மொத்த காற்றாலை மின்உற்பத்தி சாதனங்களின் தேவையில் 10 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் காற்றாலை மின்உற்பத்தி திறன் 51 ஜிகாவாட்டிலிருந்து இருமடங்கு அதிகரித்து, 107 ஜிகாவாட்டை எட்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*இதன்மூலம், நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டில், 20 சதவீதம் காற்றாலை மின்சாரம் மூலம் பூர்த்தி செய்யப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கிறது.*

*<<<<>>>>*

*விநாயகர் சதுர்த்தி, நாடுமுழுவதும் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.*

*மக்கள் தங்களது வீடுகளில் விநாயகர் சிலைகளை வைத்து, பூஜை செய்து வருகின்றனர்.*

தமிழகத்தின் பிள்ளையார்பட்டி, திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவில், புதுச்சேரி மணக்குள விநாயகர் கோவில், மும்பை சித்தி விநாயகர் கோவில் உள்ளிட்ட ஆலயங்களில் ஏராளமான மக்கள் அதிகாலையிலிருந்தே வழிபட்டு வருகின்றனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் வெளியிட்ட கூடுதல் வரி விதிப்பு அறிவிப்புகளால், இருதரப்பு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இருநாட்டு அதிகாரிகளும் நேற்று காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினர்.

இதில் வர்த்தக உறவுகளை சீரமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில், வர்த்தகம், எரிசக்தி பாதுகாப்பு, அணுசக்தி ஒப்பந்தம், தீவிரவாத எதிர்ப்பு உள்ளிட்ட அம்சங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறையும் இதனை உறுதி செய்துள்ளது.

<<<<>>>>

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா – தென்னாப்பிரிக்காவும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளின் வேளாண் வளர்ச்சிக்கான கூட்டு நடவடிக்கை குழுவின் 5-வது கூட்டம், காணொலி வாயிலாக நடைபெற்றது.

இதில், வேளாண் ஆராய்ச்சி நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்வது, திறன் மேம்பாடு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் வேளாண்துறை இணைச்செயலாளர் திரு. அஜித்குமார் சாஹூ, தென்னாப்பிரிக்காவின் சர்வதேச ஊக்குவிப்புத்துறை இயக்குநர் Thapsana ஆகியோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

இந்த ஆண்டுக்கான உலக கோப்பை செஸ் போட்டிகள் கோவாவில் வரும் அக்டோபர் 30ஆம் தேதி முதல் நவம்பர் 27ஆம் தேதிவரை நடைபெறும் என்று சர்வதேச செஸ் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவிருப்பது நாட்டிற்கு பெருமிதம் அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய இளைஞர்களிடையே செஸ் விளையாட்டு, பிரபலமடைந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக கோப்பை செஸ் போட்டிகள், பிரமாண்டமாக அமைவதுடன் உலகின் முன்னணி வீரர்களின் திறமையை வெளிப்படுத்தும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பீகார் மாநிலம், Rajgir-ல் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை ஹாக்கி சாம்பியன் போட்டிக்கான டிக்கெட்டுகள் இலவசமாக வழங்கப்படும் என்று இந்திய ஹாக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள 33 மாவட்டங்களிலும் கிரிக்கெட் விளையாட்டு அரங்கங்களை கட்ட அம்மாநில கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

<<<<END>>>>